2. நடைமுறைக் கேள்வி

பேரவைத் தலைவரின் அறையில் அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி அவையில் குறிப்பிடுதல்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. With regard to the strike in the Veterinary College, I have given notice of an adjournment motion. May I request the Hon. Speaker to read out the motion and then . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் மீது முடிவெடுக்கின்ற முறையைத் தீர்மானிப்பது பேரவைத் தலைவரைப் பொறுத்தது. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எந்த அளவிலே எடுத்துக் கொள்ளப் பட வேண்டும், பேரவைத் தலைவருடைய அறையிலேயே தீர்ப்புக் கொடுப்பதா அல்லது அவைக்குக் கொண்டு வர அனுமதித்து அதற்குப் பிறகு தீர்ப்புக் கொடுப்பதா என்பதெல்லாம் பேரவைத் தலைவரின் முடிவைப் பொறுத்ததாகும். அதைப் பற்றி இங்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மெம்பர்கள் அட்ஜெர்ன் மென்ட் மோஷன்கள் கொடுத்து அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வழக்கம்போல் தள்ளுபடி செய் தாலும் கூட, அந்த மெம்பர் அதைப் படிக்க ஒரு வாய்ப்புக் கொடுத்தால் கொண்டு வந்த நோக்கத்தை சர்க்கார் ஓரளவுக்கு உணர்ந்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படுவதோடு கொண்டு வந்தவர்களுடைய கட்சிக்கும் ஒரு பிரசாரமாக அது அமைகிறது. அந்த ஒரு சிறு உரிமையை மெம்பர்களுக்குக் கொடுத்துத் தாங்கள் அதைச் சேம்பரில் தள்ளுபடி செய்வது நல்லது. தலைவர் அவர்கள் எங்கள் கட்சிக்கு அனுதாபத்தோடு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எந்தெந்தப் பொருள்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எந்தெந்தப் பொருள்களை இந்த அவையில் கொண்டு வரலாம் என்பதை யெல்லாம் பரிசீலித்து சிலவற்றை இந்த அவையிலே கொண்டு வந்து படிக்கச் செய்து தள்ளிவிடுவதும், அவையில் கொண்டு வரக்கூடாத நிலையில் உள்ள சிலவற்றை பேரவைத் தலைவரின் அறையிலேயே தள்ளிவிடுவதும் பேரவைத் தலைவரின் முடிவைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இந்த அவைமுன் கொண்டு வருவதற்கு உகந்ததல்ல என்ற காரணத்தால் அறை யிலேயே தள்ளப்பட்டது.

DR. H. V. HANDE : I shall explain my stand. I am deeply hurt that this important thing called the Veterinary College strike which I want to bring to the notice . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒரு பொருள் முக்கியமாக இருக்கலாம். அவ்வாறு உங்களுக்கு முக்கியமாக இருக்கிற பொருளை பேரவைத் தலைவர் அவர்கள், முக்கியமானது

அவையில் சொல்லக்கூடிய நிலைமையில் உள்ளது என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் அறையிலேயே தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு அந்தத் தீர்ப்பை பெற மறுத்து மீண்டும் அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்புவது இந்த மன்றத்தின் மரபைக் காப்பதாக இருக்காது.

DR. H. V. HANDE : As a mark of expressing my deep regret, with great anguish I wish to stage a Walk-out on the issue of the Veterinary College strike. I am walking out alone and not my party, because the subject happens to pertain to my constituency.

(டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் மட்டும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

(3) கவன ஈர்ப்பு

(அ) சேலம் உருக்காலைத் திட்டம் குறித்து ஜப்பானியக் கம்பெனி முகவர்களுடன் நடந்த உரையாடல்கள்

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Education and Industries to a matter of urgent public importance, namely, the talk with the Japanese Firm Delegation about the 16th November 1968 on the question of Salem Steel Plant.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீழ்க்கண்ட அறிக்கையை அறிவிக்க முன் வருகிறேன்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த திரு. மாருபேனி-ஐடா கம்பெனி நிறுவனம் கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களை மேம்படுத்து வதில் இரும்புக்கனி உருள்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டி வந்துள்ளது. அக் கம்பெனியின் முகவர்கள் 1968, நவம்பர் 15-ல் முன்னாள் கல்வி-தொழில் அமைச்சர் அவர்களைச் சந்தித்தார் கள். இவ்வுரையாடல்கள் பொதுத் தன்மை வாய்ந்தவை. ஜப்பானில் இப்போது தொடர்ந்து நடைபெற்றுவரும் சோதனை களின் முடிவுகள் கிடைத்த பின்னர் இதுபற்றி மேற்கொண்டு விவாதிக்கலாமென ஒப்புக் கொள்ளப்பட்டது. இம்முடிவுகள் இப்போது பெறப்பட்டுள்ளன; திட்ட அதிகாரிகள் இம் முடிவுகள் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சேலம் இரும்பு எஃகு தொழிற் சாலை எப்போது உற்பத்தியை ஆரம்பிக்கும் ? உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்கும் ? அங்கு உற்பத்தியாகும் இரும்புக்குத் தற்போது நம் நாட்டிலே தேவை எப்படி இருக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாதுப் பொருளை எப்படி எடுப்பது, எப்படிப் பயன்படுத்துவது என்ற முதல் முயற்சி களுக்குத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு உருக்காலை அமைப்பது பற்றி மத்திய அரசு; திட்டக்குழு பரிசீலித்த பிறகுதான் விவரங்களைக் கூறமுடியும்.